டிரினிடி மகளிர் கல்லூரியில் பேராசிரியர் பணி மேம்பாட்டு பயிலரங்கம்

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உள் தர உறுதி மையத்தின் சார்பில் "ஆசிரியர்களுக்கு அவசியமான மென்திறன் நுட்பம்" என்றத் தலைப்பிலான ஒரு நாள் பேராசிரியர் பணி மேம்பாட்டு பயிலரங்கம்" 29.10.2022 அன்று டிரினிடி கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை கல்லூரித் தலைவர் பி.எஸ்.கே. செங்கோடன் துவக்கி வைத்தார். செயலர் கே. நல்லுசாமி தலைமை தாங்கினார். செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் அனைவரையும் வரவேற்றார். இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக நபார்டு வங்கியின் முன்னாள் தலைவர் ஆர். அமலோற்பவநாதன் கலந்து கொண்டு டிரினிடி கல்லூரிப் பேராசிரியர்களிடன் உரையாற்றினார்.

ஆசிரியப் பணி என்பது தியாகம் நிறைந்தது. கரும்பலகை கல்வி என்பது தற்போது மாறி டிஜிட்டல் கல்வி முறைக்கு தற்போதைய கல்வி முறை வந்துவிட்டது. சிறிய தொடு திரை கைப்பேசிக்குள் இப்போதைய உலகம் மிகவும் சுருங்கி விட்டது. குறிப்பாக, இணைய தளம், சமூக வலைத்தளங்கள் வளர்ச்சி அடைந்த மாணவர்கள் தொழில் நுட்ப ரீதியில் மேம்பாடு அடைந்து வருகிறார்கள். அவர்கள் படிக்கும் பாடங்களை இணையதளம், யூ டியூப் வாயிலாக முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்கிறார்கள். எனவே, தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதால் மாணவர்களை விட ஆசிரியர்கள் அதிகம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றார்.

இந்நிகழ்வில் நிர்வாக அலுவலர் உட்பட 75-க்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் உள்தர உறுதி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் என். இளமதி நன்றியுரை ஆற்றினார்.

31.10.22

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.